தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
Tamil Study Centre, Homebush Inc.
Postal Address: P O Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au info@tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2020

ஆண்டு: **3** விசேட வகுப்பு திகதி: 20/06/2020

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி பிரியதர்ஷினி இளங்கோவன்

மாணவர் பெயர்: ____________________________________________

| **வினாக்கள்** | **வினா புள்ளி** | **பெற்ற புள்ளி** |
|---|---|---|
| வினா 1 | 25 | |
| வினா 2 | 25 | |
| வினா 3 | 25 | |
| வினா 4 | 25 | |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** | |

– BLANK PAGE –

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **வினா இல** | **1** | **புள்ளிகள்** | **25** | **பக்கம்** | **3** |

# இரண்டு முட்டாள் ஆடுகள்

(Two Silly Goats – Moral Story in Tamil)

அது ஒரு அடர்ந்த காடு. அந்த காட்டின் நடுவே ஒரு குறுகிய பாலம் ஒன்று ஆற்றின் நடுவில் இருந்தது. ஒரு நாள் அந்த பாலத்தை கடப்பதற்காக இரண்டு ஆடுகள் பாலத்தின் அருகில் வந்து கொண்டு இருந்தன. ஒரு ஆடு பாலத்தின் ஒரு முனையிலும் மற்றொன்று மறுமுனையில் வந்து நின்றன.




அந்த பாலத்தை ஒரே நேரத்தில் ஒருவர் மட்டுமே கடக்க முடியும். இது தெரிந்தும் இரண்டு ஆடுகளும் பாலத்தை கடப்பதற்காக ஒரே நேரத்தில் ஏறி பாலத்தின் நடுவில் வந்து நின்றன.

முதலாவது ஆடு "**எனக்கு வழி விடு நான் செல்ல வேண்டும்**" என்றது. உடனே, இரண்டாவது ஆடு "**நான் தான் முதலில் வந்தேன் எனக்கு நீ தான் வழி விடவேண்டும்**" என்றது.

இப்படியே இரண்டு ஆடுகளும் விட்டுக்கொடுக்காமல் சண்டையிடத் தொடங்கின.



சண்டையிடும் போது இரண்டு ஆடுகளின் கால்களும் பிடிமானம் இன்றி ஆற்றில் விழத்தொடங்கின.




ஆற்றில் விழுந்தவுடன் இரண்டு ஆடுகளும் தாங்கள் செய்த தவறை நினைத்து வருந்தின. இறுதியில் இரண்டு ஆடுகளும் நீரில் மூழ்கி இறந்தன.

**நீதி**: விட்டுக் கொடுக்க வேண்டிய நேரத்தில் கண்டிப்பாக விட்டுக்கொடுக்க வேண்டும்.

## வினாக்களுக்கு விடை எழுதுக

1. இக்கதையில் எத்தனை ஆடுகள் உள்ளன?

______________________________________________________________________

2. ஆடுகள் எங்கு நின்றுகொண்டு சண்டையிடத் தொடங்கின?

______________________________________________________________________

3. ஆங்கிலத்தில் பொருள் தருக

- பாலம் ____________________________________
- பிடிமானம் ______________________________

4. இறுதியில் ஆடுகளுக்கு என்ன நேர்ந்தது?

______________________________________________________________________

5. இக்கதையின் நீதி என்ன?

______________________________________________________________________

(5 x 5 = 25 புள்ளிகள்)

| வினா இல | 2 | புள்ளிகள் | 25 | பக்கம் | 6 |
|---|---|---|---|---|---|

## சொற்களை கண்டு பிடியுங்கள்.

| | உரையாடல் | உரை, உடல் |
|---|---|---|
| 1 | குதிரை | |
| 2 | திரைப்படம் | |
| 3 | முத்திரை | |
| 4 | கால்வாய் | |
| 5 | வாய்க்கால் | |

| வினா இல | 3 | புள்ளிகள் | 25 | பக்கம் | 6 |
|---|---|---|---|---|---|

## வசனமாக ஒழுங்குபடுத்துக

1. திரும்பினார் 8 மணிக்கு இரவு அப்பா வீடு

______________________________________________

2. குரலில் வாணியின் தொனித்தது மகிழ்ச்சி

______________________________________________

3. வாணி என்னை சொன்னாள் கேட்க

______________________________________________

4. அறையில் வரவேற்பு இருந்தார் தாத்தா

______________________________________________

5. கதைகள் நல்ல கேட்கலாம் தாத்தாவிடம்

______________________________________________

| வினா இல | 4 | புள்ளிகள் | 25 | பக்கம் | 7 |
|---|---|---|---|---|---|

# காட்டியபடி மாற்றி எழுதுக

| | சிறுவர் | சிறுவர்கள் |
|---|---|---|
| 1 | அவன் | |
| 2 | மனிதன் | |
| 3 | கள்வன் | |
| 4 | நல்லவன் | |
| 5 | தமிழன் | |

(5 x 5 = 25 புள்ளிகள்)